

காவல்துறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சியை உறுதி செய்ய, ரூ.1.54 கோடி மதிப்பில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார். அந்த வகையில், சென்னை போலீஸ் சார்பில் 25 வகையான தனிநபர் மற்றும் குழுப்போட்டிகளுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சட்டப்பேரவை அறிவிப்பின்படி, காவல்துறை விளையாட்டு வீரர் வீராங்கனையர் பயன்பெறும் வகையில், ரூ.28.02 லட்சம் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள BASKET BALL COURTஐ எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

ஒன்றிய - மாநில பா.ஜ.க. அரசுகளின் கொடுங்கோன்மையால் மணிப்பூரில் மனிதப் படுகொலைகள்!

# கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## இனிகோ இருதயராஜ் தலைமை! ஆ.இராசா எம்.பி. - சா.பீட்டர் அல்போன்ஸ் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 25-

ஒன்றிய மற்றும் மாநில பா.ஜ.க. அரசுகளின் செயலிழந்த நிர்வாகத்தின் காரணமாக மணிப்பூர் மாநிலத்தில் நடக்கும் மனித படுகொலைகளை கண்டித்து அனைத்துக் கட்சியினரையும் பல்வேறு மத அமைப்புகளையும் ஒருங்கிணைத்து கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (26.6.2023-திங்கள் கிழமை) மாலை 4 மணி முதல் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சசிகாந்த் செந்தில், ஐ.ஏ.எஸ்., வி.சின்னதுரை எம்.எல்.ஏ., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., ம.தி.மு.க. முதன்மைச் செயலாளர் துரை.வைகோ, மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கே.நவாஸ்கனி எம்.பி., டி.வேல்முருகன் எம்.எல்.ஏ., இ.ஆசீர், டாக்டர் அ.நீதிநாதன், முனைவர் ஜே.ஜார்ஜ் ஸ்டீபன், செபாஸ்டின் பொலொளிபரம்பில், கே.பி.எடிசன், டாக்டர் ஏ.எம்.சின்னப்பா, எம்.ஜி.பக்தசிங், ஜெபமாலை ராஜா, டாக்டர்.இருதயம், ரேன்சம், ஆண்டனி ஜெரால்டு, எல்.அருள்சிலி உள்பட பலரும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

கலைஞர் நூற்றாண்டையொட்டி - அயலக தி.மு.க. சார்பில்

# குவைத்தில் மாபெரும் குருதிக் கொடை முகாம்!

## புதுக்கோட்டை வீ.அருள் செல்வம் தலைமை! ஒருங்கிணைப்பு - புதுக்கோட்டை பஷீர்

குவைத், ஜூன் 25-

கலைஞர் நூற்றாண்டையொட்டி குவைத்தில் அயலக தி.மு.க. (NRTIA) நடத்திய மாபெரும் குருதிக் கொடை முகாம். 23.6.2023 அன்று குவைத் ஜாப்ரியா இரத்தவங்கியில் நடைபெற்றது.

அயலக தி.மு.க. அவைத்தலைவர் புதுக்கோட்டை வீ. அருள் செல்வம் தலைமையில் செயலாளர் புதுக்கோட்டை பஷீர் ஒருங்கிணைப்பில் விழுப்புரம் ஜஹாங்கிர் வரவேற்பில் நடந்த விழாவில் பொறுப்பாளர் சிதம்பரம் தியாகராஜன், ஆலஞ்சியார், பத்தமடை சிந்தா பக்கீர், சிக்கந்தர், அறிவுமணி, மண்டல அமைப்பாளர்கள் காட்டூர் சொ.ஆறுமுகம், குடந்தை தியாகராஜன், மயிலாடுதுறை ஜியாவு தீன், சபீக்கான், ஆயிங்குடி சையத் முஸ்தபா, சேகரை செல்லத்துரை, புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, பத்தமடை கே.என்.கே. நாகூர், கறம்பக்குடி ஜாபர் சாதிக், திருவாரூர் ச.குமார், செந்தில் முருகன், அப்பாஸ்

மகளிர் அணி துணைச் செயலாளர் மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு மற்றும் கழக உடன்பிறப்புகள் பெருமளவில் கலந்து கொண்டு கலைஞரின் நூற்றாண்டைக் கொண்டாடினர்.

தளபதி பேரவை ராஜா முகம்மது,ஜாஹீர் உதயநிதி ஸ்டாலின் நற்பணி மன்றத்தின் ஆலங்குடி கார்த்திக், ஈரோடு முஸ்தபா, திராவிட கழகத்தின் சித்தார்த்தன், விடுதலை சிறுத்தைகள் அன்பரசன், அறிவழகன், மகிழன் செல்லதுரை, ம.தி.மு.க.வின், மணிவாசகம், அன்ன முகமது, தமு.மு.க.வின், பாரூக் மகாஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காணொலி வாயிலாக நிகழ்வை அயலக தி.மு.க. தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. தொடங்கி வைத்தார். விழாவில் கழக அயலக அணியின் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா சிறப்பு விருந்தினர்களாக இன்பத் தமிழ் இளங்கோவன் முனைவர் மகேந்திரன் கவிஞர் ப.ராமன், சுப்ரீம் கார்கோ நிறுவனர் சித்திக் மற்றும் கழகத்தின் உடன்பிறப்புகள் அய்யா முத்துமாணிக்கம், கார்த்திகையன்,மண்டலம் மதிவாணன், அஷ்ரப் அலி, ரங்கன், தஞ்சை ஷாத் அன்வர் தீன்,சக்காந்தி தமிழ்செல்வன்,புதுகை கனி,கொல்லாபுரம் ஜாகிர், செந்தில் சூர்யா, பொன்முடி, மைதீன்,சாஜித் அலி,பாஞ்சுபீர் முகம்மது, காலாபாண்டி, காட்டு பாவா, உளுந்தூர்பேட்டை நசீர் அகமது, சுப்பிர மணியம், ஸ்டிபன்ரோ சரியா, கள்ளக்குறிச்சி சாமி, பரங்கிப்பேட்டை நசீர் தீன், சரண்,கண்ணன், அம்ஜத் கான், சென்னை பிரகாஷ், ஆரிப் முகமது, சூர்யா, சௌகத்அலி, செந்தில் ராஜா, முகமது ரபீக், அய்யனார், சதக்கதுல்லா, சங்கர்கணேஷ், கபிலன், ராஜா முகமது, பாலா, தீனதயாளன், லமாய் ராஜ், அமுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குவைத் தமிழ் அமைப்புகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மாற்றுத்திறனாளிகள் மொத்த எண்ணிக்கையை அறிய நடவடிக்கை எடுப்பீர்!

## ஒன்றிய அரசுக்கு தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் கடிதம்!

புதுடெல்லி, ஜூன் 25-

நமது நாட்டில் உள்ள மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கையைச் சரிவர கணக்கிடாத காரணத்தால் அவர்களைப் பற்றிய முழு விவரத்தை அறிய இயலவில்லை. எனவே மாற்றுத்திறனாளிகள் மொத்த எண்ணிக்கையை அறிய உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழக மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவுக்கு கடந்த 18 ஆம் தேதி தமிழச்சி தங்கபாண்டியன் அனுப்பியுள்ள கடித விவரம்.

நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை சதவீதம் அதிகரிக்கும் விஷயம் குறித்து நீங்கள் அரசியல்வாதி என்ற முறையிலும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணை அமைச்சர் என்ற வகையிலும் முழுமையாக அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

உலக சுகாதார அமைப்பின் (டபிள்யு.எச்.ஓ.) ஆய்வறிக்கையின்படி நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் அதிகபட்சம் 15 சதவீதம் பேர் மாற்றுத் திறனாளிகள் எனத் தெரிய வந்துள்ளது. ஆனால் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை கணக்கெடுப்பில் உள்ள பல்வேறு குறைபாடுகள் காரணமாக முழுமையான மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை விவரம் துல்லியமாகக் குறிப்பிடப்படவில்லை.



மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கையை முழுமையாகக் கண்டறிய பல்வேறு உலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் மற்றும் இது தொடர்பான சர்வதேச அமைப்புகளும் நவீன உபகரணங்கள் மற்றும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ஆய்வுப் பணிகளை விரிவுபடுத்தி வருகின்றன.

ஆனால் நமது நாட்டின் தேசிய குடும்ப நல ஆய்வு அமைப்பு (என்.எப்.எச்.எஸ்.6) நடப்பு ஆண்டு ஜூலை மாதம் முதல் துவங்க உள்ள மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பில் இது தொடர்பான வினாக்களைத் தவிர்த்துள்ளது துரதிஷ்டமானது.

தற்போது கிடைத்துள்ள ஆய்வறிக்கைப் புள்ளி விவரங்களின்படி ஏழு வகையான மாற்றுத்திறனாளிகள் இடம்பெற்றுள்ளனர். ஆனால் சரியான, முறையான புள்ளிவிவரக் கணக்கெடுப்பு இல்லாத காரணத்தால் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை குறைவாக மதிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் மாற்றுத்திறனாளிகள் பற்றிய துல்லியமான புள்ளி விவரம் கிடைக்காதது மிகப் பெரும் குறைபாடாகும். மாற்றுத்திறனாளிகள் தொடர்பான அரசின் கொள்கை முடிவுகளில் இதனால் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேகமான தேவைகளை நிறைவு செய்ய வேண்டுமானால் அவர்களைப் பற்றிய முழுமையான கணக்கெடுப்பும் முழுமையான அளவில் அவர்களைப் பற்றிய விவரங்களையும் சேகரிக்க வேண்டியது அவசியமாகும்.

இத்தகைய சூழ்நிலையில் தேசிய குடும்ப நல ஆய்வு அமைப்பின் (என்.எப்.எச்.எஸ்.6) கணக்கெடுப்பில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான வினாக்களை நீக்கி இருப்பது மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை உரிமைகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகும்.

மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்வுக்காக ஒன்றிய அரசு வகுக்கும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு தேசிய குடும்ப நல ஆய்வு அமைப்பபின் ஆய்வு விவரங்கள் பெரும் துணையாக இருந்து வருகின்றன. மேலும் ஆரம்ப மற்றும் இடைநிலை சுகாதார நல்வாழ்வு அளவிலும் சுகாதார திட்டங்கள் செயல்பாட்டிலும் இந்த புள்ளி விவரங்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் தேசிய குடும்ப நலை ஆய்வில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான வினாக்களைத் தவிர்த்து இருப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் மாற்றுத்திறனாளிகளுக்குச் செயல்படுத்தப்பட்டு வரும் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் எதிர்மறையான விளைவுகளையும் உருவாக்கி விடும். அதற்கும் ஒரு படி மேலாக மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வுச் சட்டத்தின் முக்கிய குறிக்கோளையே தோல்வி அடையச் செய்துவிடும்.

ஆகவே மேலே குறிப்பிட்ட விஷயங்கள் தொடர்பாக உரிய விளக்கங்களை விரைவில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பான விஷயத்தில் உடனடியாக திருத்தம் மேற்கொண்டு செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மறவமங்கலத்தில்

# தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## கே .ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - லியோனி பங்கேற்பு!

சிவகங்கை, ஜூன் 25-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மறவமங்கலத்தில் ஒன்றிய கழக செயலாளர் யோக கிருஷ்ணகுமார் ஏற்பாட்டின் பேரில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் முன்னிட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக தெற்கு ஒன்றிய செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் திண்டுக்கல். ஐ.லியோனி குழுவினரின் கலைஞரின் புகழுக்கு பெரிதும் துணைநின்றது அரசியல் பணியே - இலக்கியப் பணியே என்ற தலைப்பில் இன்னிசை பட்டிமன்றம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன் திருமதி ஜோன்ஸ் ரூசோ, கே.எஸ்.எம். மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் ஆகியோர் பேசினார்கள். பொதுக்கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆர். எம்.கென்னடி, ஆரோக்கிய சாமி, மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கவிஞர் சிவ. முத்து வளவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாளர் கதி. ராஜ்குமார், தெற்குகழக நிர்வாகிகள் வரதராஜன், தோக்கப்பன், சமயத்துறை, மகேஸ்வரி வெங்கடேஷ், தென்னரசு, ஆர். கோதண்டபாணி, வீரய்யா, அமுதா ரமேஷ், வெங்கடேசன், செல்லையா, திருமால் அழகு, செல்வி, சேகரன்,

மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் அழகையா, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் ராஜகோபால் ஹக்கீம் உட்பட பலர் கலந்து கொண்டார்கள். மறவமங்கலம் ஐயப்பன் நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை காளையார் கோயில் தெற்கு ஒன்றிய செயலாளர் யோககிருஸ்ணகுமார் தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள் செய்திருந்தார் கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# மொழிப்போர் தியாகி க.இளமதி நூற்றாண்டு விழா - நலஉதவிகள்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்! தலைமை: மு.இ.ஏழுமலை! முன்னிலை: நந்தனம் கி.மதி!

சென்னை, ஜூன் 25-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா காணும் நூற்றாண்டில், ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க. 88 வது முன்னாள் வட்டச் செயலாளர், மொழிப்போர் தியாகி க.இளமதி (1924 2023) அவர்களின் நூற்றாண்டு துவக்க விழா இன்று (25.6.2023) நடைபெறுகிறது.

மயிலை மேற்கு பகுதி செயலாளர், 121 வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி முன்னிலையில், 123 வது வட்டச் செயலாளர் மு.இ. ஏழுமலை தலைமையில் மொழிப்போர் தியாகி க.இளமதி அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் பூக்கள் தூவி மரியாதை செலுத்தும் விழாவில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, 300 பேருக்கு நல திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இந்நிக்ச்சியில் 123 வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ. 2 / பி.எல்.சி. பாக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும், தவறாமல் கலந்து கொண்டு, மொழிப்போர் தியாகி க.இளமதி அவர்களுக்கு மரியாதை செலுத்துகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு மொழிப்போர் தியாகி க.இளமதி குடும்பத்தினர், கிருஷ்ணவேணி தட்சிணாமூர்த்தி, த. புகழேந்தி குமார், த. இளங்கோவன், த. வசுமதி, த.பத்மநாபன் (மொழிப்போர் தியாகி க.இளமதி / பட்டம்மாள் பேரன்) செய்துள்ளனர்.




இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (24.06.2023) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளின் செயல்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் காரணமாக மூடப்பட்டுள்ள திருக்கோயில்களை திறப்பதற்கு துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ. குமரகுருபரன், ஆணையர் க. வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்ட திட்டக்குழு

# உறுப்பினர் தேர்தலில் தி.மு.க.வினர் அமோக வெற்றி!

## அ.தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட அ.ம.மு.க. படுதோல்வி!

சிவகங்கை, ஜூன் 25-

சிவகங்கை மாவட்டத்தில் நேற்று முன்தினம் 12 மாவட்ட திட்டக்குழு உறுப்பினருக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் ஒன்பது மாவட்டதிட்டக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 12 உறுப்பினர்களில் மீதம் உள்ள 3 மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. நகராட்சி பேரூராட்சி சார்பில் மொத்தம் 284 பேர் வாக்காளர்கள்.

இதில் 272 பேர் வாக்களித்தார் கள். தி.மு.க சார்பில் சிவகங்கை நகர்மன்ற உறுப்பினரும் நகர துணை செயலாளருமான வீனஸ் ராமநாதன் தேவகோட்டை நகர்கழக செயலாளர் பெரி. பாலா திருப்புவனம் பேரூராட்சி வார்டு உறுப்பினர் சித்ராதேவி ஆகியோர் திமுக சார்பில் போட்டியிட்டார்கள் .சிவகங்கை நகர்மன்ற உறுப்பினரும், நகர அ.ம.மு.க செயலாளருமான அன்புமணி அ.தி.மு.க.ஆதரவுடன் போட்டியிட்டார். தேர்தலில் 272 வாக்குகள் பதிவானது. 12கவுன்சிலர்கள் வாக்களிக்க வரவில்லை. பிற்பகல் 3 மணிக்கு வாக்குகள் என்ன பட்டது. இதில் வீனஸ் ராமநாதன் 226 வாக்குகளும், பெரி. பாலா 221 வாக்குகளும், சித்ராதேவி 211 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றார்கள். 4வாக்குகள் செல்லாதவை. இதில் அ.தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட அ.ம.மு.க. வேட்பாளர் அன்புமணி 66 வாக்குகள் பெற்று படுதோல்வி அடைந்தார். வெற்றி பெற்ற மூன்று தி.மு.க. வேட்பாளர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் ஆர்.சிவராமன் சான்றிதழ்களை வழங்கினார். உதவி தேர்தல் அலுவலர்களாக வீரராகவன் விஷ்ணுப்ரியன் ஆகியோர் நடத்தினார்கள்.

அதை தொடர்ந்து போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்பட்ட 9 மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களான மாவட்ட கவுன்சிலர்கள் நாகினி செந்தில்குமார், ஏ.கே.மதிவாணன், ஏடிஎன். ரவி, திருமதி ராதா பாலசுப்ரமணியன், மஞ்சூரி லட்சுமணன், சரஸ்வதி, உட்பட 9 பேர்களுக்கு தேர்தல் அதிகாரி சிவராமன் சான்றிதழ்களை வழங்கினார். வருகிற 28ஆம் தேதி சிவகங்கை மாவட்ட திட்ட குழு முதலாவது கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் காலையில் நடைபெறுகிறது.

வெற்றி பெற்ற மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் வீனஸ் ராமநாதன் பெரி. பாலா சித்ராதேவி ஆகியோருக்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, நகர்மன்ற தலைவரும் சிவகங்கை நகரசெயலாளருமான துரைஆனந்த் முன்னாள் துணை தலைவர் கார்கண்ணன் எம்.எல்.ஏ. மாரியப்பன் கென்னடி மானாமதுரை நகர செயலாளர் க.பொன்னுச்சாமி ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், கே.ஆர். ஆனந்த், இளைஞரணி அயூப் கான் சேவியர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தார்கள்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என 5 பிரிவுகளில் முதலமைச்சர் கோப்பைக்காக நடைபெற்ற 50 வகையான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 1886 வீரர், வீராங்கனைகளுக்கு திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் டாக்டர்.அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் ரூ37.68 இலட்சம் மதிப்பீட்டிலான காசோலைகளை வழங்கி பாராட்டினார். உடன் ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, கே.ஜெயக்குமார் எம்.பி, துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ மாவட்ட சேர்மன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, கல்லூரி முதல்வர் முனைவர். கயல்விழி, மாவட்ட விளையாட்டு துறை அலுவலர் க.பிரேம்குமார், அரங்க அலுவலர் செ.அருணா, மற்றும் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, ப.சிட்டிபாபு, த.எத்திராஜ், மகாலட்சுமி மோதிலால், சி.சு.ரவிச்சந்திரன், ஆர்.ஜெயசீலன், மோ.ரமேஷ், கே.அரிகிருஷ்ணன், சி.ஜெ.சீனிவாசன், ஆ.சக்திவேலு, அபிராமி குமரவேல், விஜயகுமாரி சரவணன், சுபாஷினி பாஸ்கர் உள்பட பலர் உள்ளனர்.